## ஆடி வெள்ளி அலங்காரம்...



ஆடி வெள்ளி, வரலட்சுமி விரதத்தையொட்டி கோவை பெரியகடை வீதி மாகாளியம்மன் கோயிலில் நவதானியங்களால் அலங்கரிக்கப்பட்டு பக்தர்களுக்கு அருள்பாலித்த அம்மன். (2) விளாங்குறிச்சி காமாட்சியம்மன் கோயிலில் சந்தனக்காப்பு, மலர் அலங்காரத்தில் காட்சியளித்த அம்மன். (3) புலியகுளம் மாரியம்மன் கோயிலில் வளையல் அலங்காரத்தில் காட்சியளித்த அம்மன்.

# பொள்ளாச்சியில் இன்று வேளாண் இயந்திரங்கள் பராமரிப்பு முகாம்

**கோவை, ஆக. 8:** கோவை மாவட்டம், பொள்ளாச்சியில் வேளாண் இயந்திரங்கள் பராமரிப்பு முகாம் விவசாயிகளுக்காக நடைபெற உள்ளதாக மாவட்ட நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

கோவை மாவட்டத்தில் வேளாண்மைப் பொறியியல் துறை மற்றும் தனியார் வேளாண் இயந்திர உற்பத்தி நிறுவனங்களுடன் இணைந்து வேளாண் இயந்திரங்கள் பராமரிப்பு குறித்த முகாம், பொள்ளாச்சி, மீன்கரை சாலையில் உள்ள தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர் அலுவலகம் அருகே உள்ள தமிழ்மணி நகரில் ஆகஸ்ட் 9 (சனிக்கிழமை) காலை 10 முதல் பிற்பகல் 2 மணி வரை நடைபெற உள்ளது.

இம்முகாமில் விவசாயிகள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் இயக்கம், பராமரிப்பு முறைகள், தனியார் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் தயாரிக்கும் நிறுவனங்களின் பொறியாளர்களுடனும், அலுவலர்களுடனும் நேரில் கலந்துரையாடி விளக்கம் பெறலாம். இம்முகாமில் விவசாயிகள் பெருமளவு பயன்படுத்தப்படும் டிராக்டர்கள், பவர் டில்லர்கள், களையெடுக்கும் கருவிகள், ட்ரோன் போன்ற வேளாண் இயந்திரங்கள் காட்சிபடுத்தப்படுகின்றன. மேலும் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை இயக்குதல், பராமரித்தல், பழுதுகளை கண்டறிதல், உதிரிபாகங்கள் குறித்த தெளிவுரை, மசகு எண்ணெய் மற்றும் உயவுப் பொருள்களின் பயன்பாடு பற்றி விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் செயல்விளக்கம் அளிக்கப்படவுள்ளது.

இம்முகாமில் இயந்திரங்களில் உள்ள சிறுபழுதுகள் மற்றும் பராமரிப்புப் பணிகள், மசகு எண்ணெய் மற்றும் உயவுப் பொருள்களை ஆள்கூலி செலவில்லாமல் மாற்றிக் கொள்ளவும், தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. வேளாண்மைப் பொறியியல் துறை சார்பில் நடைபெறும் இம்முகாமில் விவசாயிகள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாலியல் வன்கொடுமை வழக்கில் கைதான அரசுப் பள்ளி ஆசிரியர் பணி நீக்கம்

**கோவை, ஆக. 8:** கோவையில் பாலியல் வன்கொடுமை வழக்கில் கைது செய்யப்பட்ட அரசுப் பள்ளி ஆசிரியர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

கோவை மாவட்டம், ஆலாந்துறையில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக அந்தப் பள்ளியின் உடற்கல்வி ஆசிரியர் ஆனந்தகுமார் என்பவர் 2023 டிசம்பரில் கைது செய்யப்பட்டார். இதையடுத்து அவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். மாணவி ஏற்கெனவே புகார் தெரிவித்திருந்தும் உரிய நடவடிக்கை எடுக்காமல், ஆசிரியர் ஆனந்தகுமாருக்கு ஆதரவாக செயல்பட்டதாக 6 ஆசிரியர்கள் பணியிட மாற்றம் செய்யப்பட்டனர். மேலும் ஓய்வுபெற இருந்த அப்பள்ளியின் தலைமை ஆசிரியரும் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.

இந்த நிலையில் சிறையில் இருந்து பிணையில் வந்துள்ள உடற்கல்வி ஆசிரியர் ஆனந்தகுமாரை பணி நீக்கம் செய்து கோவை முதன்மைக் கல்வி அலுவலர் உத்தரவிட்டுள்ளார். இதற்கான உத்தரவு நகல் சம்பந்தப்பட்ட ஆசிரியரை பள்ளிக்கு நேரில் வரவழைத்து அண்மையில் வழங்கப்பட்டுவிட்டதாக பள்ளிக் கல்வித் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## பராமரிப்புப் பணி: போத்தனூர் – மேட்டுப்பாளையம் ரயில் நாளை ரத்து

**கோவை, ஆக. 8:** வடகோவை ரயில் நிலையத்தில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் போத்தனூர் - மேட்டுப்பாளையம் மெமு ரயில் முழுவதுமாக ரத்து செய்யப்படுவதாக ரயில்வே நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, சேலம் ரயில்வே கோட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

பராமரிப்புப் பணிகளால் ஆகஸ்ட் 10 (ஞாயிற்றுக்கிழமை) போத்தனூரில் இருந்து காலை 9.40 மணிக்குப் புறப்படும் போத்தனூர் - மேட்டுப்பாளையம் மெமு ரயில் (எண்: 66612) முழுவதுமாக ரத்து செய்யப்படுகிறது. இதேபோல, மேட்டுப்பாளையத்தில் இருந்து அன்று பிற்பகல் 1.05 மணிக்குப் புறப்படும் மேட்டுப்பாளையம்- போத்தனூர் மெமு ரயில் (எண்: 66615) முழுவதுமாக ரத்து செய்யப்படுகிறது.

**கேரள ரயில் மாற்றுப் பாதையில் இயக்கம்:**

பராமரிப்புப் பணிகள் காரணமாக ஆகஸ்ட் 10-ஆம் தேதி காலை 6 மணிக்கு ஆலப்புழையில் இருந்து புறப்படும் ஆலப்புழை- தன்பாத் விரைவு ரயில் (எண்: 13352) கோவை வழியாக இயக்கப்படாமல், போத்தனூர் - இருகூர் வழித்தடத்தில் இயக்கப்படும். போத்தனூர் கூடுதல் நிறுத்தமாக செயல்படும்.

இதேபோல, அன்று காலை 9.10 மணிக்கு எர்ணாகுளத்தில் இருந்து புறப்படும் எர்ணாகுளம்- பெங்களூரு ரயில் (எண்: 12678) கோவை வழியாக இயக்கப்படாமல், போத்தனூர், இருகூர் வழியாக இயக்கப்படும். போத்தனூர் கூடுதல் நிறுத்தமாக செயல்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாநில கல்விக் கொள்கை: கல்வியாளர்கள் விமர்சனம்

**கோவை, ஆக 8:** பல்வேறு கூறுகள் விடுபட்டிருப்பதாகக் கூறி தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள மாநில கல்விக் கொள்கையை கல்வியாளர்கள் விமர்சித்துள்ளனர்.

இது குறித்து அண்ணா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் இ.பாலகுருசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழக அரசுப் பள்ளிக் கல்வி குறித்து வெளியிட்டுள்ள கல்விக் கொள்கை அழகாக எழுதப்பட்ட ஒரு ஆவணமாக உள்ளது. ஆனால் அவற்றை செயல்படுத்துவதற்கான செயல் திட்டங்கள், கொள்கை அறிக்கைகள் எதுவும் அதில் இடம் பெறாதது துரதிர்ஷ்டவசமானது.

இந்த கல்விக் கொள்கையானது ஒரு நீண்ட கட்டுரையாகத் தோன்றும் அதேநேரத்தில் அவற்றில் சில கூறுகள் தேசிய கல்விக் கொள்கை 2020-இல் இருந்து கடன் வாங்கப்பட்டவை போலத் தெரிகின்றன. இந்த கல்விக் கொள்கையில் 11-ஆம் வகுப்புக்கு பொதுத்தேர்வு நடத்தும் முடிவை கைவிடுவதாக அறிவித்திருப்பது பிற்போக்குத்தனமானது.

பல தனியார் பள்ளிகளில் 11-ஆம் வகுப்பு பாடத்தை நடத்தாமலேயே பிளஸ் 2 பொதுத் தேர்வுக்கு மாணவர்களை தயார்படுத்தி வந்தனர். இதைத் தடுக்கும் வகையிலும், தேசிய அளவிலான ஜேஇஇ, நீட் போன்ற பொதுத் தேர்வுகளுக்கு தமிழக மாணவர்களை தயார்படுத்தும் வகையிலும் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு 11-ஆம் வகுப்புக்கு பொதுத் தேர்வு அறிவிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது.

தற்போது அந்தத் தேர்வை நீக்குவது மாணவர்களின் எதிர்காலத்தை கடுமையாக பாதிக்கும். தமிழ்நாட்டில் உயர்கல்வியின் தரம் ஏற்கெனவே மோசமாக இருக்கும் நிலையில், இது நிலைமையை மேலும் மோசமாக்கும். உயர்கல்வி மாணவர் சேர்க்கைக்கு பிளஸ் 1 மதிப்பெண்ணையும் கணக்கில் எடுத்துக் கொள்வதாக மாநில அரசு அறிவிப்பதன் மூலம் உயர்கல்வியின் தரத்தை மேம்படுத்த முடியும் என்கிறார்.

**ஏமாற்றம் அளிக்கிறது:** முன்பருவக் கல்வி குறித்து எந்தவித அறிவிப்பும் இல்லாததுடன் கல்வி உரிமைச் சட்டத்தின் முழு கூறுகளையும் அமல்படுத்துவது பற்றி எந்த விளக்கமும் இல்லாமல், தெளிவில்லாமலும் குழப்பத்துடனும் இந்த கல்விக் கொள்கை வெளியிடப்பட்டிருப்பதாக கல்வி செயற்பாட்டாளர் கோவை வே.ஈசுவரன் தெரிவித்துள்ளார்.

தனியார் பள்ளிகளின் கட்டண விகிதம், தரம், ஆசிரியர்களின் தகுதி, அரசுப் பள்ளிகளின் உள்கட்டமைப்பு போன்றவை குறித்தும் எந்த விரிவான கொள்கையும் அதில் இடம்பெறவில்லை. அரசுப் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப 7.5 சதவீத இடஒதுக்கீட்டை அதிகரிப்பது, பயிற்சி மைய வியாபாரத்தைக் கட்டுப்படுத்துவது போன்றவற்றில் அரசின் கொள்கை என்னவென்று தெரியவில்லை. அதேபோல, தமிழ் பயிற்று மொழி குறித்த தெளிவான அறிவிப்பு இல்லை. தமிழை பயிற்று மொழியாக கொண்டு படிப்பவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிப்பது குறித்து தெரிவித்திருக்க வேண்டும். தற்போது அதிகமாக பேசப்படும் மொழிக் கொள்கை குறித்து விரிவாக இல்லாமல் மேம்போக்காக கருத்து தெரிவித்திருப்பது வியப்பளிக்கிறது என்று தெரிவித்துள்ளார்.


**NAME CHANGE**

I, **K PONNAMMAL** Mother of No. 15156056 A Rank HAV Name K MURUGAN, residing at H.NO 104C, Balaji Nagar, Rasampalayam Road, Periyasemur, Villarasampatti, Erode, Tamil Nadu - 638107 have changed my name from **K PONNAMMAL to PONNAMMAL KAMATCHI** Vide Affidavit date of 15.07.2025 Sworn before Notary by C.S Veerakumar, Erode

**K PONNAMMAL**

**NAME CHANGE**

I, **V KAMATCHI** Father of No. 15156056 A Rank HAV Name K MURUGAN, residing at H.No 104C, Balaji Nagar, Rasampalayam Road, Periyasemur, Villarasampatti, Erode, TamilNadu-638 107 have changed my name from **V KAMATCHI to KAMATCHI VELLAISAMY** vide Affidavit date of 15.07.2025 Sworn before Notary by C.S Veerakumar, Erode

**V. KAMATCHI**

**பொது அறிவிப்பு**

M/s. இண்டியன் புராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனமானது கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு வட்டம், வடபுதூர் கிராமம் சர்வே எண். 2/1A, 2/1B1, 2/2A2, 2/2A3A, 7/2B, 8/2B-ல் அமைந்துள்ள தொழிற்சாலையில் கூடுதல் கட்டிடங்கள் கட்டுவதற்காக, தமிழ்நாடு சுற்றுசூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடம் (SEIAA), அதன் 25.07.2025 தேதியிட்ட கடித எண். EC25C3806TN5334687N மூலம் சுற்றுசூழல் அனுமதி பெற்றுள்ளது. அவ்வனுமதியின் நகலை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் இணையதளத்திலும் (https://parivesh.nic.in/) காணலாம்.

**M/s. இண்டியன் புராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்,**
ஏலூர் ரோடு, வடபுதூர்,

**TNPL தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்**
காகிதபுரம் – 639 136. கரூர் மாவட்டம், தமிழ்நாடு.
தொலைபேசி : 04324 – 277001 (10 இணைப்புகள்)
இமெயில் : stores.dis@tnpl.co.in

TNPL அலகு-Iல், கீழ்காணும் கழிவுகள் மற்றும் கழிவுப் பொருட்களை விற்பனை செய்ய "உள்ளது உள்ளபடி" ஆறு மாதங்கள் விற்பனை ஒப்பந்த அடிப்படையில் விற்க டெண்டர்கள் வரவேற்கிறது.

| ஒப்பந்தப்புள்ளி எண். | பணியின் விவரம் | கடைசி நாள் |
| --- | --- | --- |
| 2025025 | Effluent Filter Cake. | 25.08.2025 |

பிழை திருத்தங்கள் இருப்பின் அவை NIC இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும். விரிவான விதிமுறைகள் & நிபந்தனைகள். அளவு, ஒப்பந்தப்புள்ளிக் கட்டணம் மற்றும் பிணை வைப்புத்தொகை ஆகியவற்றை https://tntenders.gov.in/nicgep/app இணையதளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ/4248/ஒப்பந்தப்புள்ளி/2025 நாட்டின் இயற்கைவளம் போற்றுவ் காகிதம் செய்வோம்

**ஆர்த்தோ ஒன்**
எலும்பு மற்றும் மூட்டு சிகிச்சை மையம்



**தோள்பட்டை மாஸ்டர்ஸ் கோர்ஸ் - 2025**

ஆர்த்தோ-ஒன் அகாடமி
தொடர் – 6 கருத்தரங்கு
"சிக்கலானவற்றை விவாதிக்கலாம்"

- உலகளாவிய நிபுணத்துவம்
- தோள்பட்டை அறுவை சிகிச்சையில் மேன்மை

CREDIT HOURS - TNMC 4

9 மற்றும் 10 ஆகஸ்ட் 2025 (சனி & ஞாயிறு)
ஹோட்டல் தாஜ் விவாந்தா, கோயம்புத்தூர்

பதிவிற்கு: WWW.ORTHO1ACADEMY.COM
மின்னஞ்சல்: ACADEMY.SERIES@ORTHO-ONE.IN | அலைபேசி: 9580 371 371

**AMBIKA COTTON MILLS LIMITED**
Regd. Office : 15/9A, Valluvar Street, Sivanandha Colony, Coimbatore - 641 012.
CIN : L17115TZ1988PLC002269
Phone : 0422-2491504 | 2491505
website: www.acmills.in, email: ambika@acmills.in

**STATEMENT OF UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER ENDED 30/06/2025**
(Rs. In Lakhs,except per share data)

| Particulars | Quarter Ended | | | Year Ended |
| --- | --- | --- | --- | --- |
| | 30.06.2025 | 31.03.2025 | 30.06.2024 | 31.03.2025 |
| | Unaudited | Audited | Unaudited | Audited |
| 1. Total Income from Operations | 19527 | 14335 | 21563 | 72858 |
| 2. Operating Profit | 3022 | 3065 | 4040 | 12983 |
| 3. Finance Cost | 403 | 331 | 483 | 1620 |
| 4. Gross Profit | 2619 | 2734 | 3557 | 11363 |
| 5. Depreciation | 488 | 555 | 572 | 2244 |
| 6. Net profit/(Loss) for the period (before tax and exceptional items) | 2131 | 2179 | 2985 | 9119 |
| 7. Net profit/(Loss) for the period before tax (after exceptional items) | 2131 | 2179 | 2985 | 9119 |
| 8. Net profit/ (Loss) for the period after tax (after exceptional items) | 1592 | 1586 | 2153 | 6574 |
| 9. Other Comprehensive Income | 0 | -54 | 0 | -54 |
| 10. Total Comprehensive income for the period (Comprising Profit / (Loss) for the period (after tax ) | 1592 | 1532 | 2153 | 6520 |
| 11. Equity Share Capital | 572.5 | 572.5 | 572.5 | 572.5 |
| 12. Reserves (excluding Revaluation Reserve ) as per Audited Balance Sheet | - | - | - | 89833 |
| 13. Earnings Per Share (of Rs.10/- each) (for Continuing and discontinued operations) | | | | |
| a) Basic | 27.81 | 27.70 | 37.61 | 114.83 |
| b) Diluted | 27.81 | 27.70 | 37.61 | 114.83 |

**Note :** The above is an extract of the detailed format of **Quarterly Financial Results ended 30th June, 2025** filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI ( Listing Obligation and Disclosure requirements) Regulations, 2015. The full format of the **Unaudited Financial Results for the Quarter ended 30th June 2025** are available on the Company's websites (**www.acmills.in**) and on the websites of BSE (**www.bseindia.com**) & NSE (**www.nseindia.com**)

Place : Coimbatore
Date : 08.08.2025

For Ambika Cotton Mills Limited
S/d
P.V.Chandran
Chairman & Managing Director
DIN:00628479

**THE NEW INDIAN EXPRESS** requires

**OFFICER - SCHEDULING**
at
**COIMBATORE**

**Qualification and experience:** Graduate / Post Graduate with minimum 2 to 5 years of work experience in advertisement scheduling / marketing with a proven track record in back-end operations.

**Job Profile:** Candidate will be part of the team responsible for coordinating, communicating and overseeing the execution of schedules of advertisement releases across multiple editions/publications. The candidate will also need to creatively make layout for ads on pages to enhance visual appeal.

Should have strong inter-personal skills to closely interact and coordinate with editorial, production etc.

Good computer skills, knowledge of local language is a must.

Freshers can also apply, selected candidates will be deployed as trainees.

Salary will not be a constraint for deserving candidate.

Interested candidates may mail us at **managercbe@newindianexpress.com** or send their resume to:

**Chief Manager**
**The New Indian Express Group**
Express Garden, 110,
Pankaja Mill Road, Ramanathapuram,
Coimbatore-641 045.



OFFICER - SCHEDULING

**சுந்தரம் மியூச்சுவல்**
சுந்தரம் பைனான்ஸ் குரூப்

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களின் திட்டத் தகவல் ஆவணம் (SID) மற்றும் முக்கிய தகவல் குறிப்பாணை (KIM) ஆகியவற்றுடன் கூடிய சேர்க்கை அறிவிப்பு

**சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களின் தயாரிப்பு லேபிளிங்கின் ('ரிஸ்க்-ஓ-மீட்டர்') திருத்தம்**

SEBI சுற்றறிக்கை எண்: SEBI/HO/IMD/DF3/CIR/P/2020/197, நாள்: அக்டோபர் 05, 2020–ன் படி சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் ("நிதி") திட்டங்களின் ரிஸ்க்-ஓ-மீட்டர் கீழ்க்கண்டவாறு திருத்தப்படும் என முதலீட்டாளர்கள் / யூனிட் வைத்திருப்பவர்களுக்கு இதன்மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

| திட்டத்தின் பெயர் | தற்போதுள்ள ரிஸ்க்-ஓ-மீட்டர் (ஜூன் 30, 2025 இன் ஸ்கீம் போர்ட்ஃபோலியோவின் அடிப்படையில்) | திருத்தப்பட்ட ரிஸ்க்-ஓ-மீட்டர் (ஜூலை 31, 2025 இன் ஸ்கீம் போர்ட்ஃபோலியோவின் அடிப்படையில்) |
| --- | --- | --- |
| சுந்தரம் லிக்யுட் ஃபண்ட் |  RISKOMETER The risk of the scheme is Low to Moderate |  RISKOMETER The risk of the scheme is Moderate |
| சுந்தரம் கன்சர்வேடிவ் ஹைபிரிட் ஃபண்ட் |  RISKOMETER The risk of the scheme is Moderately High |  RISKOMETER The risk of the scheme is Moderate |
| சுந்தரம் பேலன்ஸ்டு அட்வான்டேஜ் ஃபண்ட் |  RISKOMETER The risk of the scheme is High |  RISKOMETER The risk of the scheme is Moderately High |
| சுந்தரம் டைவர்சிபைட் ஈக்விட்டி ஃபண்ட் |  RISKOMETER The risk of the scheme is Very High |  RISKOMETER The risk of the scheme is High |

மேலே குறிப்பிட்டுள்ளபடி ரிஸ்க்-ஓ-மீட்டர்களில் ஏற்பட்ட மாற்றத்தைத் தவிர, இயற்கை, முதலீட்டு நோக்கம், சொத்து ஒதுக்கீடு முறை, மேலே குறிப்பிடப்பட்ட திட்டங்களின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் உள்ளிட்ட திட்ட அம்சங்களில் வேறு எந்த மாற்றமும் இல்லை என்பதை முதலீட்டாளர்கள் கவனிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

திட்டத் தகவல் ஆவணம்(கள்) / முக்கிய தகவலின் மற்ற அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் குறிப்பாணை(கள்) / கூடுதல் தகவலின் அறிக்கை மாறாமல் இருக்கும்.

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களின் திட்டத் தகவல் ஆவணம் (SID) / முக்கிய தகவல் குறிப்பாணை (KIM) / கூடுதல் தகவலின் அறிக்கை (SAI)யின் ஒருங்கிணைந்த பகுதியாக இந்த சேர்க்கை அமைகிறது.

இடம்: சென்னை
தேதி: ஆகஸ்ட் 09, 2025

சுந்தரம் அசெட் மேனேஜ்மென்ட் கம்பெனி லிமிடெட்டுக்காக,
ரா. அஜித் குமார்
நிறுவனத்தின் செயலாளர் & கம்ப்ளையன்ஸ் ஆபீசர்

மேலும் தகவலுக்கு, தொடர்பு கொள்ளவும்:
சுந்தரம் அசெட் மேனேஜ்மென்ட் கம்பெனி லிமிடெட் (சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் முதலீட்டு மேலாளர்)
CIN: U93090TN1996PLC034615

கார்ப்பரேட் அலுவலகம்: 1வது & 2வது தளம், சுந்தரம் டவர்ஸ், 46, ஒயிட்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை 600 014.
தொடர்புக்கு: 1860 425 7237 (இந்தியா), +91 40 2345 2215 (வெளிநாட்டு இந்தியர்களுக்கு)
www.sundarammutual.com
பதிவு அலுவலகம்: எண். 21, பட்டுலோஸ் சாலை, சென்னை - 600 002.

**மியூச்சுவல் ஃபண்ட் முதலீடுகள் சந்தை அபாயங்களுக்கு உட்பட்டவை, திட்டம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் கவனமாக படிக்கவும்.**

கல்வி, வேலை வாய்ப்பு செய்திகளுக்கு... www.dinamani.com